# முதல்வர் மு.க.ஸ்டாலின் முதலீட்டாளர் மாநாட்டில் பங்கேற்றார்!

**முதல் பக்கத் தொடர்ச்சி...**

இதுவரை ஜப்பான் சென்றுள்ள அரசுக் குழுக்கள் டோக்கியோ மட்டுமே சென்று வந்துள்ளன. ஒசாகாவில் இந்திய வம்சாவளியினர் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இங்கு பல முன்னணித் தொழில் நிறுவனங்களும் அமைந்துள்ளன. எனவே, ஒசாகா நகருக்கும் வருகை தரும்படி விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று முதல்முறையாக ஒசாகா நகருக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்தக் குழு சென்றது.

ஒசாகாவில், ஜப்பான் வெளியுறவு வர்த்தக நிறுவனமான, ஜெட்ரோ (JETRO) நிறுவனத்துடன் இணைந்து அங்கு நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்.

மேலும் முக்கிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளைச் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுத்தார். அதனைத் தொடர்ந்து ஒசாகா வாழ் இந்திய சமூகத்தினர் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டார்.

டோக்கியோ நகரில் அந்நாட்டின் பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் நிஷுமுரா யசுதோஷி மற்றும் ஜப்பான் தொழில் நிறுவனமான, ஜெட்ரோ தலைவர் இஷிகுரோ நொரிஹிகோ அவர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்தார். மேலும், 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்துகொள்ளும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் கலந்துகொண்டார்.

கியோகுடோ மற்றும் ஓம்ரான் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளபட்டன. மேலும் முதல்வர் அவர்கள் அங்குள்ள மேம்பட்ட தொழில் மையத்தைப் பார்வையிட்டார்.


**இயந்திர பொறியியல் துறை**

கீழ்காணும் பணியினை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWD/Mech) அவர்களால் குறுகிய கால மறு மின்னனு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண். எம்1/1924B/2022,
50 எண்ணிக்கையிலான இலகுரக காம்பாக்டர் வாகனங்களை இரண்டாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ளும் பணி.

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : 08.06.2023 பிற்பகல் 3.00, மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 09.06.2023 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு : http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2741 / ஒப்பந்தப்புள்ளி / 2023 — மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.,)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்


### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி - எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி. முன்னிலை!

# தஞ்சை தெற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை அறிவிப்பு



தஞ்சை தெற்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் பட்டுக்கோட்டை, வாளவன்புரம் பார்வதி மஹாலில், மாவட்டக் கழக அவைத்தலைவர் சுப.சேகர் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி, முன்னாள் மாவட்டக் கழக பொறுப்பாளர் ஏனாதி ப.பாலசுப்ரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.அசோக்குமார் எம்.எல்.ஏ, மாநில கொள்கைப்பரப்பு இணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, மாநில தொண்டரணி துணை செயலாளர் சுப.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அதுசமயம் கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகசெயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

பொருள் : மே 21 கழக உயர்நிலை செயல்திட்டக்குழு கூட்ட தீர்மானங்கள் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு " உடன்பிறப்புகளாய் இணைவோம்" புதிய உறுப்பினர் சேர்த்தல்.


கழக ஆக்கப்பணிகள்.

**கா.அண்ணாதுரை**
செயலாளர்
தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# குன்றத்தூர் தா.மோகலிங்கம்

## மே 27 (2012)



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் கழகம் வளர அரும்பாடுபட்டவர். குன்றத்தூர் பேரூர்க் கழகச் செயலாளராக தொடர்ந்து முப்பது ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக ஐந்து ஆண்டுகள் மக்கள் பணியாற்றினார்.

திருப்பெரும்புதூர் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றியவர். தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநராகவும் இருந்துள்ளார்.

அவர்மீது கொலைமுயற்சி வழக்கு உள்ளிட்ட பல பொய் வழக்குகள் தொடரப்பட்டு அ.தி.மு.க. ஆட்சியில் பலமுறை சிறை சென்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள்!

## குன்னம் சி.இராஜேந்திரன் - எம். பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், மே 27 - மாநில இளைஞரணி செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி,

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்றது.

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்,தேனூர் கிராமத்தில், ஆலத்தூர் ஒன்றிய கழகச்செயலாளர் சோமு.மதியழகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலை மைக் கழக பேச்சாளர் சன்.கோ. சண்முகம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம்,ரஞ்சன்குடி கிராமத்தில், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழகச்செயலாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் வரகூர் காமராஜ் கலந்து கொண்டு சிற ப்புரையாற்றினார். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால்,

பெரம்பலூர் ஒன்றியம். அம்மாபாளையம் கிராமத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் எம்.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்

சேலம் சுஜாதா கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

வேப்பூர் வடக்கு ஒன்றியம். நமையூர் கிராமத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் கரூர் முரளி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்.கொட்டரை கிராமத்தில் ஒன்றிய கழகச்செயலாளர் ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவருமான என். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் சிங்கை பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பெரம்பலூர் நகரத்திற்குட்டபட்ட அரனாரை மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் நகரக் கழக செயலாளர் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில், மாவட்ட கழகச்செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமை கழக பேச்சாளர் போடி.காமராஜ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

வேப்பூர் தெற்கு ஒன்றியம்.கல்லை கிராமத்தில், வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில், தலைமை கழக பேச்சாளர்

சேலம் கோவிந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம்,நூத்தப்பூர்

கிராமத்தில், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழகச்செயலாளர் எஸ்.நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்

எழுமூர் கோபி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# மேல்மலையனூர் - அன்னமங்கலத்தில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

செஞ்சி, மே 27 - விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் தி.மு.க. அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் அன்னமங்கலம் ஊராட்சியில் நடைபெற்றது. மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இளவரசன் தலைமை தாங்கினார்.ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நிர்மல் ராஜ்,மணிகண்டன் ,திருமாறன், ஜாகீர், சரவணன், ஸ்டாலின் சங்கர், சி.ஜெயக்குமார், இ. ஜெயக்குமார் முன்னிலை வகித்தனர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கந்தவேல் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும்வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான், தலைமை கழக பேச்சாளர் பொன்னேரி சிவா, மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணிநெடுஞ்செழியன் ஆகியோர் கலந்து கொண்டு தி.மு.க. அரசின் இரண்டு ஆண்டு சாதனை திட்டங்களை விளக்கி சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன்,முன்னாள் மாவட்ட பிரதிநிதி தேசிங்கு,முன்னாள் ஒன்றிய துணை செயலாளர்சேகர், ஒன்றிய பொருளாளர் சரவணன், மாவட்ட பிரதிநிதிகள் ராமமூர்த்தி, ஜெய்சங்கர், செந்தில்குமரன், அர்ஷத் பேக் ,ரேணு, ரவிச்சந்திரன், ராஜா,ஒன்றிய துணை செயலாளர்கள் பெருமாள், தமிழரசி பாண்டியன், ஆறுமுகம், ரகுராமன், சிவசக்தி, ஒன்றிய பொருளாளர் கோபாலகிருஷ்ணன்,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் செல்வம் , தன்ராஜ், சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் ஷேக் ஷரிப்,மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஏழுமலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.பி. சம்பத் நன்றி கூறினார்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம் - திருப்பூர் தெற்கு மாநகரம்,

# வீரபாண்டி பகுதி, 54 வது வட்டம் - முத்தணம்பாளையம் பகுதி, 58வது வட்டம் ஆகிய - வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகரம், வீரபாண்டிபகுதி, 54வது வட்டச் செயலாளர் பி. கர்ச்சிக்குமார் அவர்கள், வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டதால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **திரு. ப.மோகன்ராஜ்** (2-588, நலேத்துத் தோட்டம், வீரபாண்டி, திருப்பூர்-5) அவர்கள், 54வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

முத்தணம்பாளையம் பகுதி, 58வது வட்டச்செயலாளர் வி.ஆர்.மனோகரன் அவர்கள், சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **திரு. சா.ராஜேந்திரன்** (1/42, கே.செட்டிபாளையம், தாராபுரம் ரோடு, திருப்பூர்) அவர்கள், 58வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.5.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பள்ளிபாளையம் வடக்கு, பள்ளிபாளையம் மத்திய, பள்ளிபாளையம் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் குமாரபாளையம் வடக்கு, குமாரபாளையம் தெற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் மற்றும் ஒன்றிய, நகரக் கழக பொறுப்பாளர், பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் நாமக்கல்மேற்கு மாவட்டம், குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டபள்ளிபாளையம் ஒன்றியம், **பள்ளிபாளையம்** வடக்கு, **பள்ளிபாளையம் மத்திய, பள்ளிபாளையம் தெற்கு**ஆகிய 3 ஒன்றியக் கழகங்களாகவும் **குமாரபாளையம் நகரம் குமாரபாளையம் வடக்கு, குமாரபாளையம் தெற்கு** ஆகிய 2 நகரக் கழகங்களாகவும் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றிய மற்றும் நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட பள்ளிபாளையம் வடக்கு, பள்ளிபாளையம் மத்திய, பள்ளிபாளையம் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாகவும்-குமாரபாளையம் வடக்கு, குமாரபாளையம் தெற்கு ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாக அமையும்.

**பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியம் (குமாரபாளையம் தொகுதி):** 1.தட்டாங்குட்டை, 2.பல்லக்காபாளையம், 3.சௌதாபுரம், 4.குப்பாண்டபாளையம், 5.கனியனூர் அக்ரஹாரம் ஆகிய 5 ஊராட்சிகள்.

**பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம் (குமாரபாளையம் தொகுதி):** 1.எலந்தகுட்டை, 2.பாதரை, 3.பள்ளிபாளையம் அக்ரஹாரம், 4.களியனூர், 5.சமயசங்கிலி ஆகிய 5 ஊராட்சிகள்.

**பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம் (குமாரபாளையம் தொகுதி):** 1.கொக்கராயன்பேட்டை, 2.பாப்பம்பாளையம், 3.ஓடப்பள்ளி, 4.புதுப்பாளையம், 5.காடச்சநல்லூர் ஆகிய 5 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட பள்ளிபாளையம் வடக்கு, **பள்ளிபாளையம் மத்திய, பள்ளிபாளையம் தெற்கு** ஆகிய ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**பள்ளிபாளையம் வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **என். நாச்சிமுத்து,** 9/46, குட்டைக்காடு, மலையடிபாளையம், பல்லக்காபாளையம், குமாரபாளையம், நாமக்கல்மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. ஏ.ஜான்பீட்டர், தட்டாங்குட்டை, 2. எம்.ஆர்.ராஜேந்திரன், குப்பாண்டபாளையம், 3. திருமதி ஆர்.ஜெயந்தி, சௌதாபுரம். 4. விஜயகுமார், களியனூர் அக்ரஹாரம்.5. எஸ்.ராஜ், தட்டாங்குட்டை. 6. எஸ். கார்த்திக், கல்லாங்காட்டுவலசு.

**பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஆர். செல்வம்,** 4/89, இ.காட்டூர், எலந்தகுட்டை, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. ஏ.நடேசன், எலந்தகுட்டை.2.ஆர்.செந்தில்குமார், பள்ளிபாளையம் அக்ரஹாரம், 3. எஸ்.மாதேஸ்வரன், சமயசங்கிலி. 4. பழனிசாமிகளியனூர். 5.ஆர். கலையரசன், எலந்தகுட்டை. 6.திருமதி ஆர்.கௌசல்யா, பாதரை.

**பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஏ.இளங்கோவன்,** கொக்கராயன்பேட்டை, பள்ளிபாளையம், குமாரபாளையம், நாமக்கல்மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எஸ்.ராதாகிருஷ்ணன், ஓடப்பள்ளி. 2. எஸ்.ஆறுமுகம், புதுப்பாளையம். 3. ஆர்.சந்திரசேகரன், காடச்சநல்லூர். 4. ஜி. கணேசன், ஓடப்பள்ளி. 5. திருமதி ஜெ. தமிழ்செல்வி ஜான்சன், பாப்பம்பாளையம், 6. எம்.சம்பத்குமார், காடச்சநல்லூர்.

**குமாரபாளையம் வடக்கு நகரம்**

(குமாரபாளையம் தொகுதி): 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17 ஆகிய 17 வார்டுகள்

**குமாரபாளையம் தெற்கு நகரம்**

(குமாரபாளையம் தொகுதி): 18,19,20,21,22,23,24,25,26,27,28,29,30,31,32,33 ஆகிய 16 வார்டுகள்

**நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **குமாரபாளையம் வடக்கு, குமாரபாளையம் தெற்கு** ஆகியநகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**குமாரபாளையம் வடக்கு நகரம்**

பொறுப்பாளர் :**எம். செல்வம்,** 7ஏ1, கிழக்கு காவேரிநகர், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எம்.சத்தியசீலன், 8வது வார்டு, 2. என்.கந்தசாமி, 9வது வார்டு, 3. எஸ்.ராஜ்குமார், 17வது வார்டு. 4. கே.பன்னீர்செல்வம், 14வது வார்டு, 5. ஐ.ஜேம்ஸ், 11வது வார்டு,

**குமாரபாளையம் தெற்கு நகரம்**

பொறுப்பாளர் : **எஸ். ஞானசேகரன்,** 42, ஜே.கே.கே.சுந்தரம் நகர், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1. எம்.செந்தில்குமார், 27வது வார்டு. 2.கே.ஏ.ரவி, 22வது வார்டு. 3. எஸ்.செல்வகுமார், 25வது வார்டு. 4. ஆர்.எஸ்.தர்மராஜன், 26வது வார்டு. 5. திருமதி எம்.தேவிமணி, 23வது வார்டு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 25.5.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோவை மணியன்

## மே 27 (2009)



கழகத்தின் முன்னோடிப்பேச்சாளர்களில் ஒருவர். எளிமையானவர். பள்ளியில் படிக்கும்போதே பேச்சுப் போட்டிகளில் பலமுறை கலந்து கொண்டு சொல்லில் வல்லவனாகத் திகழ்ந்து பரிசுகள் பல பெற்றவர்.

கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

மிசா காலத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர். கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றவர்.

தாம் பங்கேற்ற பொதுக்கூட்டங்களைப் பற்றியும் அதனால் விளையும் பயன்களைப் பற்றியும் மாதந்தோறும் தவறாமல் தலைமைக் கழகத்திற்குப் பட்டியல் அனுப்புவதை தன் கடமையாகக் கொண்டிருந்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை உடன்பிறப்புக்குத் தீட்டிய மடலில் இவரது பிரச்சாரப் பணியைப் பாராட்டியுள்ளார்.

இவருக்கு, தலைமைக் கழகம் சார்பில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'கலைஞர் விருது' வழங்கிசிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**